

# அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொது மக்கள் கருத்தறிக் குழுவின் மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான பொதுக் கலந்துரையாடலின் அறிக்கை

## மாத்தளை, கண்டி, அக்கறைப்பற்று, மட்டக்களப்பு, கந்தளாய்



2016 ஜூலை 08/09/13/14


ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා වෙනසකට පුරවැසි ප්‍රයත්නය
அரசியலமைப்பு மாற்றத்திற்கான பிரஜைகளின் முயற்சி
Citizens' Initiative for Constitutional Change

# அறிமுகம்



சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையில் “அரசியலமைப்பு சீர்த்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறிக் குழுவானது” நாட்டின் அனைத்து பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் பொதுமக்களின் கருத்தாலோசனைகளைப் பெற்றிருந்தது. குறித்த கருத்தாலோசனைகள் மற்றும் குழுவின் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையானது தற்போது பாராளுமன்ற தேர்வுக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக கலந்துரையாடலின் ஆரம்பம் முதல் அது தொடர்பில் அர்பணிப்புடன் ஒன்றினைந்து செயற்பட்ட அமைப்பாக அரசியலமைப்பு மாற்றத்திற்கான பிரஜைகளின் முயற்சி அமைந்தது. இதன் நோக்கம் கருத்தறிக்குழு அறிக்கை தொடர்பிலான கலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். இதற்கமைவாக நாட்டின் அனைத்து பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் படிநிலை அடிப்படையில் கலந்துரையாடல் ஏற்படுத்தப்பட்டது.

**கலந்துரையாடல்கள் இடம்பெற்ற திகதிகள் மற்றும் இடம் பின்வருமாறு.**

| திகதி | நகரம் | இடம் |
|---|---|---|
| 08.07.2016 மாலை | மாத்தளை | லிபடி உணவகம் |
| 09.07.2016 காலை | கண்டி | டெவோன் ரெஷ்ட் உணவகம் |
| 13.07.2016 காலை | அக்கறைப்பற்று | அரசசாரபற்ற அமைப்புகளின் ஒன்றியம் |
| 13.07.2016 மாலை | மட்டக்களப்பு | அரசசாரபற்ற அமைப்புகளின் ஒன்றியம் |
| 14.07.2016 காலை | கந்தளாய் | லேக் ப்ரொன்ட் உணவகம் |

இக் கலந்தரையாடலுக்கு புதிய அரசியலமைப்புக்காக கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கிய பிரஜைகள் வருகை தந்திருந்ததுடன் சட்டத்தரணி எஸ்.ஜி. புஞ்சிஹேவா மற்றும் லயனல் குருகே போன்றோர் பிரதான உரை நிகழ்த்தினர்.

இக் கலந்துரையாடலின் போது பிரஜைகள் தங்கள் கருத்தாலோசனைகளை கருத்தறிக் குழு அறிக்கையில் உள்வாங்கப்படல் தொடர்பாக சாதகமான பிரதிபலிப்பினை காணக்கூடியதாக இருந்த போதிலும் அவர்கள் அவர்களினுடைய கருத்துகள் முழுமையாக உள்வாங்கப்படவில்லையென குறிப்பிட்டார்கள். எவ்வாறாயினும் சிறந்த அரசியலமைப்பினை உருவாக்கிக் கொள்வதற்கான குழுவின் பரிந்துரைகளை அரசியலமைப்பினுள் உள்வாங்கிக் கொள்வது தொடர்பிலும், அறிக்கையில் உள்வாங்கப்படாத ஆலோசனைகளை உள்வாங்கிக் கொள்ளுதல் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது பிரஜைகள் முன்வைத்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கிடையில் சாதக, பாதக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றிற்கு வளவாளர்கள் மூலம் உரிய பதிலளிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் விவாதம் உச்சத்தை அடைந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

இதன் போது நிபுணத்துவ குழுவினர் மற்றும் வருகை தந்திருந்த பிரஜைகள் முன்வைத்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் சுருக்கமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

# லயனல் குருகே



ஆரம்ப நிகழ்வாக திரு. லயனல் குருகே நோக்க உரையாற்றியிருந்தார். இதன்போது அரசியலமைப்பு தொடர்பாகவும், புதிய அரசியலமைப்பின் அவசியம் குறித்தும் கருத்துரையாற்றியிருந்தார். மேலும் அரசியலமைப்பு வரலாறு தொடர்பில் கருத்து தெரிவித்த திரு. லயனல் குருகே 1931 டொனமூர், சோல்பரி போன்ற அரசியலமைப்புக்கள் உருவாகிய விதம் தொடர்பில் மேலும் தெளிவூட்டினார். எனது தனிப்பட்ட விருப்பத்திற்கு இணங்க சோல்பரி அரசியலமைப்பு வரவேற்கத்தக்கதாகும். தொடர்ந்து 72 ஆண்டு அரசியலமைப்பு உருவானது. அன்று இவ்வாறாக பொதுமக்களது கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது பாராளுமன்ற தேர்வுக்குழுவாக முழு பாராளுமன்றமும் முன்வந்து குறித்த அரசியலமைப்பானது உருவாக்கப்பட்டது. அன்று இச்செயற்பாட்டிற்கு தலைமை தாங்கியவர் கொல்வின் ஆர் டி சில்வா ஆவார்.

இதன்போது நாட்டிற்கு முழுச் சுதந்திரம் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதுவரை ஆளுநராக செயற்பட்ட டீ. வில்லியம் கொப்பலாவ பெயரளவில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அதுவரை இணைந்து செயற்பட்ட சமஷ்டி கட்சியானது அரசாங்கத்திலிருந்து விலகிச் செயற்பட்டது. 1977 ஆம் ஆண்டில் திரு. ஜே.ஆர்.ஜயவர்தனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கி அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதாக உறுதிமொழியளித்தார். அதன் காரணமாகவே ஆறில் ஐந்து பெரும்பான்மை வாக்குகளால் அவர் வெற்றி பெற்றார்.

குறித்த அதிகாரத்தை பயன்படுத்தி தனது சகோதரனின் மூலம் அரசியலமைப்பை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட அரசியலமைப்பு காலப்பகுதியிலேயே 30 வருடகால யுத்தம் இடம்பெற்றது. 30 வருடகால இளைஞர் கலவரம், முப்பது வருடகால யுத்தத்தின் பின்னர் மீண்டும் அரசியலமைப்பொன்றினை உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அதற்காக அரசாங்கமும் தனது ஒத்துழைப்பினை வழங்குவதாக தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இந் நாட்டின் அரசியலமைப்பினை உருவாக்குதலின் போது பொதுமக்களின் கருத்தாலோசனைகள் பெற வேண்டும் என முதன் முறையாக ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கருத்து தெரிவித்த திரு. லயனல் குருகே புதிய அரசியலமைப்பிற்காக பொது மக்களின் கருத்தறிக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். மேலும் தற்போது பொது மக்களின் கருத்தறிக் குழுவின் கருத்தாலோசனைகள் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிலர் தமது கருத்தாலோசனைகள் அறிக்கையில் இல்லையென குற்றஞ்சாட்டப்பட்டாலும் அரசியல் அமைப்பு உருவாக்கலின் போது அனைவரதும் கருத்துக்களையும் உள்ளடக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். மேலும் ஒருசில விடயங்கள் குறித்து குறிப்பிட்டு ஒரு வாக்கியத்தை மாத்திரம் பயன்படுத்தி அரசியலமைப்பில் முழுமையான விடயங்களை உள்ளடக்க முடியுமா? எனவும் குறிப்பிட்ட இவர் வரவேற்கத்தக்க கருத்தாலோசனைகள் தொடர்பாக அவதானம் செலுத்தியிருந்தார்.

அரசியலமைப்பு உருவாக்க செயற்பாட்டை தேசிய செயற்பாடொன்றாக அரசாங்கம் கருதவில்லை என குறிப்பிட்ட திரு. லயனல் குருகே இலங்கையில் வாழும் 90 வீதமான பொதுமக்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவது தொடர்பாக எவ்வித கருத்துக்களும் அறியாதுள்ளனர் எனவும் அதன் காரணமாகவே இது குறித்து பொதுமக்களது கருத்துக்கள் அதிகமாக வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார். இது குறித்து ஊடக நிறுவனங்களும் மந்தமான அனுசரணையையே வழங்கியிருந்தது. மேலும் அண்ணளவாக இரண்டு கோடி மக்கள் வரை வாழும் நாட்டில் வெறுமனே முன்றாயிரத்து ஐந்நூறு பிரஜைகள் மாத்திரமே கருத்துக்களை தெரிவித்திருந்தனர். இது ஓர் தேசிய விடயமாக இடம்பெறவில்லை என்பதை சுட்டிக்காட்டிய திரு. லயனல் குருகே தென்னாபிரிக்கா, கென்யா போன்ற நாடுகளில் அரசியலமைப்பு உருவாக்க செயற்பாடுகள் குறித்து உதாரணங்களை முன்வைத்தார்.



திரு. லயனல் குருகே இறுதியாக தெரிவிக்கையில், தற்பொழுது அரசியலமைப்பிற்கு பிரஜைகளின் கருத்தாலோசனைகள் உள்ளடங்கிய பரிந்துரைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் செயற்பாட்டுடைய பிரஜைகள் என்ற அடிப்படையில் இது குறித்து குரல் கொடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியிருந்தார்.

உட்கட்சி ஜனநாயகம் போன்ற கருத்துக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை எனவும், குறிப்பிட்ட ஒவ்வொரு விடயங்கள் தொடர்பாக எண்ணிக்கை அடிப்படையில் பிரஜைகள் எந்தளவு ஆலோசனைகளை வழங்கினார்கள் போன்ற விடயங்கள் உறுதியாக குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்தார். எனினும் மனித உரிமைகள் தொடர்பில் மிகவும் பெறுமதியான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் குறைபாடுகள் காணப்பட்டாலும் கூட அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக தேவையான காலம் இக்குழுவின் அறிக்கை ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ளதென தான் விசுவாசிப்பதாகவும் தற்பொழுது பிரஜைகள் என்ற அடிப்படையில் அரசியலமைப்பிற்கு கருத்தாலோசணைகளை வழங்கி பார்வையாளர்களாக இருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பல்வேறு சட்டங்கள் உருவாக்கலின் போது பொதுமக்களிடம் எவ்வித கருத்தும் கேட்டறியப்படவில்லை. தகவலரியும் சட்டம் மற்றும் ஔடதச் சட்டம் போன்ற சட்டங்கள் அவ்வாறாகவே உருவாக்கப்பட்டது.

மொழிக் கொள்கை, நுகர்வோர் உரிமை, தொடர்பாக கருத்து தெரிவித்த திரு. லயனல் குருகே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்கு அநீதி ஏற்படுமாயின் அதற்கெதிராக முன்வருதல் வேண்டும். மொழி தொடர்பிலும், நுகர்வோர் உரிமை தொடர்பிலும் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் சில குறித்தும் கருத்துக்களை முன்வைத்து தெளிவூட்டினார்.

இறுதியாக அவர் குறிப்பிடுகையில் சிறந்த முறையில் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு நாட்டின் பிரஜைகள் செயற்பாட்டுடைய ஒத்துழைப்பை பாராளுமன்ற தேர்வுக் குழுவிற்கு கருத்தாலோசணைகளை வழங்கி அழுத்தம் செலுத்த வேண்டுமென தெரிவித்தார்.



# சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா

புதிய அரசியலமைப்பு தொடர்பாக பொதுமக்கள் கருத்தறி குழுவின் அறிக்கையில் மிகவும் முக்கியமான பரிந்துரைகள் தொடர்பான விளக்கமளிப்பதே திரு. புஞ்சிஹேவாவின் நோக்கமாகும். இதன்போது தற்போது உலகில் காணப்படும் உயரிய மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க மற்றும் கென்யா போன்ற நாடுகளின் அரசியலமைப்பு தொடர்பில் விளக்கமளித்தார். ஐரோப்பிய நாடுகளின் (நோர்வே, ஸ்வீடன், ஸ்கென்டேனியா) அரசியலமைப்புகளில் காணப்படும் மிக உயரிய மனித உரிமைகள் உள்ளடங்கிய ஜனநாயக இலட்சணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த கருத்தாலோசணைகள் மற்றும் பரிந்துரைகள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்படல் தொடர்பாக பிரதான இரண்டு கருத்துக்கள் குறித்து தனது அவதானத்தினை செலுத்தினார். முதலாவதாக இந்த கருத்தாலோசணைகள் மற்றும் பரிந்துரைகள் அரசியலமைப்பில் உள்வாங்கப்படுமா என்ற பிரச்சினை இருப்பதாகவும் அதற்காக பொதுமக்கள் விழித்தெழ வேண்டும் எனவும் திரு. புஞ்சிஹேவா குறிப்பிட்டார். மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமித்து அனுப்பப்பட்டிருந்தாலும் குறித்த கருத்தாலோசனைகள் அரசியலமைப்பில் உள்ளடங்க செய்வதற்கு அழுத்தம் செலுத்த வேண்டியுள்ளது.

இரண்டாவது கருத்தாக அவர் தனது கவனத்தைச் செலுத்துகையில் உயரிய அரசியலமைப்பு என்ற அடிப்படையில் அடையாளப்படுத்திய தென்னாபிரிக்க மற்றும் கென்யா அரசியலமைப்பு பாவனையின் போது குறைப்பாடுகள் காணப்படுவதாகவும் இதன் காரணமாக இப் பரிந்துரைகளை அரசியலமைப்பினுள் உள்வாங்கினாலும் இவை அமுலாக்கப்படல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்காக இந்திய அரசியலமைப்பில் காணப்படும் உறுப்புரையை எடுத்துக்காட்டி மேலும் தெளிவூட்டினார். இந்திய அரசியலமைப்பில் 32ஆம் உறுப்புரையில் உயிர் வாழ்வதற்கான உரிமை உண்டென குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் உறுப்புரை மிகவும் ஆழமாக பகுத்தாராயப்பட்டாலும் இந்திய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விரும்பிய நேரத்தில் ஒருவரின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள முடியுமென கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் சில உரிமைகள் பாதுகாக்கப்பட்டாலும் அதை மீறுவதற்கான வாய்ப்புக்கள் சட்டத்திலேயே காணப்படுவது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

பொதுமக்கள் கருத்தறி ஆணைக்குழு மற்றும் வரலாறு தொடர்பிலான மேலும் சில கருத்துக்களை முன்வைத்த திரு. புஞ்சிஹேவா ஆணைக்குழுவின் கருத்துக்களை விட பொது மக்களின் கருத்துக்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதென ஏனைய ஆணைக்குழுக்களையும் விடவும் இவ்வாணைக் குழுவானது மிகவும் பரந்த ஆணைக்குழுவாகும் என்ற இக் கருத்தினை தான் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார். அதேபோல இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆலோசனைகளும் அரசியலமைப்பில் உள்வாங்கப்படுமாயின் தென்னாபிரிக்கா, கென்யா அரசியலமைப்புக்களையும் விடவும்

முழுமையானதொரு அரசியலமைப்பை உருவாக்க முடியுமென குறிப்பிட்டார். ஆனால் அவ்வாறு இடம்பெறுமா என்பது கேள்விக்குறி என்ற கேள்வி காணப்படுவதாகவும் தெரிவித்த எஸ்.ஜி பொது மக்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கை என்பதை கவனத்தில் கொண்டு இக்கருத்தாலோசணைகளை அரசியலமைப்பிற்குள் உள்வாங்கப்படாதிருப்பது கேள்வி எழுப்ப வேண்டியதொன்றாகும்.

இவ் அறிக்கையானது மிகவும் பரந்தளவாக காணப்படுகின்றமையினால் குறிப்பிட்ட சில விடயங்கள் தொடர்பில் மாத்திரம் கலந்துரையாடுவதற்கு முற்பட்டார்.

- அதிகாரப் பகிர்வு

பரிந்துரையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் அளவு மற்றும் தன்மையை கருத்திற் கொண்டு அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

- மாகாண ஆட்சி



நடைமுறையிலுள்ள மாநகர சபை, நகரசபை, பிரதேச சபைகளுக்கு மேலதிகமாக கிராம மட்டத்தில் கிராமிய சபை ஒன்றை ஸ்தாபித்தல், உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளின் போது ஆலோசனை, கண்காணிப்பதற்கு கிராமிய சபைக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டங்களை கிராமங்களாக அடையாளப்படுத்துவதுடன் கிராமிய சபை, சிறு நகரசபை, நகரசபை மற்றும் மாநகர சபைகளின் பிரிவுகளாக வகைப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

- அடிப்படை ஒழுங்கு முறை

சந்தை மற்றும் அரச கட்டமைப்பிற்கு மாற்றீடாக கூட்டுறவு கட்டமைப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் கூட்டுறவு கட்டமைப்பை மேம்படுத்தி அரசியல் தலையீடுகள் இன்றி செயற்பட இடமளிக்க வேண்டும்.

தொழிலகங்களில் அடிப்படை உரிமைகள் தொடர்பில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் உரிமைகளை அரசு பாதுகாக்க வேண்டும்.

- அரசு கையொப்பமிட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகள், சமவாயம் மற்றும் ஒப்பந்தங்கள் போன்றவற்றில் கையொப்பமிட்டு ஒரு வருடத்திற்குள் சட்டமாக்க உறுதியளித்தல் அரசின் பொறுப்பாகும்.

  இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிகள் குறித்து எந்த ஒரு நீதிமன்றமும் சட்ட ரீதியாக அதிகாரம் செலுத்த முடியாது.

குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன் திரு. புஞ்சிஹேவா அதற்கு மேலதிகமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பில் கீழ்வரும் காரணங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.



- அடிப்படை உரிமைகள்
  - உயிர் வாழ்வதற்கான உரிமை
  - சம உரிமைச் சட்டம் - மேலதிகமாக நடாத்தப்படல், பாரபட்சம் காட்டுதலுக்கு எதிரான ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபித்தல்.
  - நடைமுறையிலுள்ள 12(2) மேலும் விஸ்தரிக்கப்பட்டது.
  - இனம், மதம், சாதி, சிவில் அந்தஸ்து, தாய்மை, வயது, மொழி, உடல் அல்லது உள குறைபாடு, கர்பிணித்தன்மை, சிவில் நிலை, விதவையாதல், சமூக பொதுத்தன்மை, பாலியல் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் - பாகுபாடு செலுத்தாமை.

- தனிநபரது உரிமைக்கோ அல்லது அடிப்படை சுதந்திரத்திற்கோ எதிராக நிர்வாக செயற்பாடொன்றின் காரணமாக அழுத்தம் செலுத்தப்படுமாயின், குறிப்பிட்ட அழுத்தத்திற்கான காரணங்களை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ள அந்நபருக்கு உரிமை உண்டு.
- சுகாதாரத்திற்கான உரிமை
  - உணவு, நீர் மற்றும் சமூக பாதுகாப்பு
  - உணவுப் பாதுகாப்பு, உணவு சுயாதீனத் தன்மை
  - போதுமானளவு உணவு, நீர், உடை உறையுள்
  - பட்டினியின்றி இருப்பதற்கான உரிமை சமூக பாதுகாப்பு – சமூக காப்புறுதி
- கல்வி உரிமை
- காணி உரிமை
- சுற்றாடலைப் பாதுகாத்தல்
- தொழில் புரிவதற்கு, தொழில் மற்றும் வாழ்வாதாரத்திற்கான உரிமை
- தொழிற்சங்க உரிமை
- சர்வதேச வியாபார ஒப்பந்தம் வெளிநாட்டு முதலீடு உள்நாட்டு சட்டங்களை பொருட்படுத்தாமை
- தொழிலாளர் திணைக்களத்தில் தொழிலாளர்களுக்கான உரிமைகளை பாதுகாப்பதில் அசமந்தப் போக்கு
- அரச தொழில் வாய்ப்பின் போது பொதுவான தன்மை மற்றும் சம சந்தர்ப்பம்
- காணாமல் போகாததற்கான உரிமை
- தகவல் பெற்றுக் கொள்ளல்
- நீதிக்கான உரிமை
- மூத்த குடியினருக்கான உரிமை
- நுகர்வோர் உரிமை
- நிலையான அபிவிருத்தி மற்றும் இயற்கைக்கான உரிமை

- பல்வேறு பாலியல் அடையாளமுடைய மக்களுக்கான உரிமை
- பெண் உரிமை
- குழந்தைகளது மற்றும் இளைஞர்களின் உரிமை
- அங்கவீனர்களுக்கான உரிமை
- மிருகங்களுக்கான உரிமை

**பரிந்துரை**

- நீதிமன்ற செயற்பாட்டின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றமும் பொறுப்புக் கூறல் வேண்டும்.
- தனியார் நிறுவனத்தின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நிறுவனம் சட்ட ரீதியாக சவால் விடக்கூடியதாக அமைய வேண்டும்.
- அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கலிட எந்தவொரு நபருக்கும் அல்லது குழுவிற்கும் முடியுமானதாக இருக்க வேண்டும்.
- பரிந்துரை அடிப்படை உரிமை விண்ணப்பமொன்று சமர்ப்பிப்பதற்கான கால எல்லை மூன்று மாதம் வரை நீடிக்க வேண்டும்.
- உரிய சந்தர்ப்பத்தில் முறையற்ற விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வகையில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பில் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் விரிவாக முன்வைத்த திரு. புஞ்சிஹேவா இந்த பரிந்துரைகள் அரசியலமைப்பிற்குள் உள்ளடக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தார். அவ்வாறு உள்ளடக்கப்படவில்லையெனின் பிரஜைகள் அதற்காக முன்வந்து அவதானத்தினைச் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

**பிரஜைகளின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள்**



- 71,89 இளைஞர் கலவரங்கள் மற்றும் முப்பது வருட யுத்தம் உருவாகுவதற்கான காரணம் குறித்து மீளாய்வு செய்து அவ்வாறு இடம்பெறுவதற்கு ஏதுவான விடயங்கள் குறித்து ஆராய்ந்து இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் இடம்பெறாத விதத்தில் அரசியலமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.
- சுனாமி, மண்சரிவு போன்ற அனர்த்தங்களின் போது நிவாரணம் பெற்றுக் கொள்ளல் மனித உரிமையாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
- குத்தக விவசாய சட்டம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

- மதச்சார்பற்ற தனிநபரின் உரிமைகள் அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை அதிகாரத்தினை உருவாக்கி பிரஜைகளுக்கு அதிகாரங்கள் கிடைப்பதற்கான உபாயங்களை மேற்கொள்ளல்.
- மாகாண சபைகள் ஒன்பதிலும் செனட் முறையை உருவாக்கி அதனை கெபினட் சபையுடன் இணைத்தல் வேண்டும்.
- புதிய அரசியலமைப்பில் உறுப்புரைகளின் அளவு அதிகரிக்கப்படாதிருத்தல் வேண்டும்.
- சமஷ்டி மற்றும் டயஸ்போரா போன்ற சொற்கள் தொடர்பிலான தெளிவான கருத்தினை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.
- அதிகாரப் பகிர்வின் போது மாகாணங்களுக்கிடையில் காணப்படும் ஆறுகள், ஓடைகள் என்பன நிர்வாகக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது கவனத்திலெடுக்க வேண்டும்.
- அடிப்படை மனித உரிமை உறுப்புரையின் பின்னர் அவற்றை அமுல்படுத்துவதற்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் குறிப்பிடப்படல் வேண்டும்.
- கெபினட் முறைக்குப் பதிலாக நிர்வாகச் சபை ஆட்சிக் குழுவை அமைத்தல் வேண்டும்
- அரசியலமைப்பு தொடர்பில் தேசிய கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பித்தல் வேண்டும்.
- மதம் மற்றும் அரசின் தன்மை போன்ற விடயங்களில் அரசியல்வாதிகள் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.
- சம்பிரதாய அனுபவங்களை உபயோகப்படுத்தி நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை பாதுகாத்துக் கொள்வதற்கு கருத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.
- மேலும் அடிமட்டப் பிரஜைகளின் (பிரதேச ரீதியாக மற்றும் கிராம மட்டத்திற்குச்) சென்று அவர்களின் கருத்துக்களை அரசியலமைப்பிற்காக பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- கல்குவாரி போன்ற வேலைத் தளங்கள் செயற்படுவதனால் அவற்றினால் ஏற்படும் உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் சரியான முறையை கையாளுதல் வேண்டும்.
- அடிப்படை மனித உரிமை மீறப்படும் பட்சத்தில் எழுத்து மூலமாக அது தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என குறிப்பிட்டாலும் ஒரு சில வேளையில் தபால் மூலம் அனுப்பும் போது அவை காணாமல் போனால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.
- சட்டங்களை உருவாக்கி அவை செயற்படுத்தப்படும் போது பிரஜைகளுக்கு சட்டம் தொடர்பில் அறிந்து கொள்தற்கு நிலையானதோர் முறை காணப்படல் வேண்டும்.
- அடிப்படை மனித உரிமைகள் காணப்பட்டாலும் சமூகத்தில் அதிகமாக இடம்பெறும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து தெளிவின்மை.
- அரசியலமைப்பு உறுப்புரைகள் அதிகரிக்கப்படுவது முரண்பாட்டுக்குரியதாகும்.
- பௌத்த மதம் அரச மதம் என குறிப்பிடப்படுவதால் பௌத்த மதத்திற்கு முதலிடமும் ஏனைய மதங்களுக்கு இரண்டாம் பட்சமாக கணிக்கப்படுகிறது என்ற உணர்வு ஏற்படுதல்.
- அடிப்படை உரிமை மீறப்படும் பட்சத்தில் உயர் நீதிமன்றத்திற்குச் செல்வது அசௌகரியமான விடயம் என்பதால் மாவட்ட மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் இதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் நீதிமன்றக் கட்டமைப்பினை ஸ்தாபித்தல் முக்கியமானதாகும்.

- வடகிழக்கு இணைக்கப்படல் வேண்டும்.
- தேசிய கொடி, மதம் போன்ற விடயங்கள் தொடர்பில் பொதுவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். ஓர் இனத்திற்கு மாத்திரம் பக்கச்சார்பாக செயற்படக் கூடாது.
- நிலைமாற்ற நீதி போன்ற விடயங்கள் அரசியலமைப்பினுள் உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும்
- பெண்களுக்கு சம உரிமை கொடுக்கப்படல் வேண்டும்.



- பிரஜைகளுக்கான வளப்பகிர்வு தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்படல் வேண்டும்.
- நீதிமன்றத்தில் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வழக்கு விசாரணை இடம்பெறல் வேண்டும்.

மேலும் சிங்கள பௌத்த தலைவர் இந்நாட்டின் அரச தலைவராவது, சிங்கள தேசம், சிங்கலே (சிங்க குருதி) போன்ற பெயர்களில் இந்நாடு அழைக்கப்பட வேண்டும் எனவும் அரச மதமாக பௌத்த மதம் காணப்படல் வேண்டும் போன்ற ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.